**Minutes of the Public Hearing Meeting held on 24.02.2024 at 04.00 P.M. at Pari Mahal, Trichy – Chidambaram National Highway, Opp to Thelur Electricity Board Office, Thelur Village & Post, Ariyalur Taluk, Ariyalur District.**

**Name of the Project**: M/s.Tamil Nadu Cements Corporation Limited for the proposed Lime kankar and Limestone Quarry over an extent of 22.89.0 Ha, SF. Nos.350, 351/1A,351/4A, 351/7A, 351/12A, 356, 357, 359, 361 & etc., Pudupalayam Village, Ariyalur Taluk, Ariyalur District.

**List of Officials participated in the meeting:**

1. Thiru. M.Ramakrishnan
   Revenue Divisional Officer,
   Ariyalur,
   Ariyalur District.

2. Dr. M.Senthil Kumar,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Ariyalur District.

**List of participants related to the project:**

1. Thiru.T. Ravichandran,
   Deputy General Manager/Plant Manager,
   Tamil Nadu Cement Corporation Limited,
   Ariyalur.

2. Thiru.M.Muthuselvan,
   Deputy Manager
   Tamil Nadu Cement Corporation Limited,
   Head Office,
   Chennai

3. Thiru.P.Gopinath
   Environmental Consultant.

**List of Participants including Government Officers, Project Proponent and the general public is enclosed vide Annexure - A.**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board welcomed the Revenue Divisional Officer, Ariyalur, members of the public, farmers association representatives, environmental activists, officials from the revenue department and police department, press, and the Project Proponent, M/s. Tamil Nadu Cements Corporation Limited to the public hearing meeting on behalf of the district administration and Tamil Nadu Pollution Control Board.

He informed that to obtain Environmental Clearance from the Ministry of Environment, Forests & Climate Change, as per EIA Notification dated 14.09.2006, as amended, public opinion has to be obtained for certain types of projects/activities listed in the said notification before the issue of Environment Clearance. He also informed that the views of the public will be recorded and it will be forwarded to the State Environment Impact Assessment Authority as a routine procedure. He stated that M/s. Tamil Nadu Cements Corporation Limited has applied for environmental clearance for mining of lime kankar and limestone quarry over an extent of 22.89.0 Ha in S.F. Nos.350, 351/1A, 351/4A, 351/7A, 351/12A, 356, 357, 359, 361 & etc., Pudupalayam Village, Ariyalur Taluk & District and this public hearing is being held to get the public's views on the project before issuing the environmental clearance.

He also informed that the Public Advertisements regarding the Public Hearing were published on 23.01.2024 in Dinathathi and The New Indian Express News Papers, 30 days before the date of the meeting.

DEE informed that after the Representative of the Company would explain about the project& EMP measures, after which the Public and Environmental Activists can give their opinion and seek clarification about the project orally or by written submission also. He also informed that the views of the Public would be recorded through video and audio and the recorded meeting proceedings will be forwarded to the State Environment Impact Assessment Authority as per routine procedure.He then humbly requested the Revenue Divisional Officer to preside over the Meeting.

The Revenue Divisional Officer, Ariyalur greeted everyone present and asked the representative from M/s. Tamil Nadu Cements Corporation Limitedto hold a presentation regarding the project.

Environmental Consultant Mr.Gopinath welcomed all and presented the Project details, impacts and EMP measures proposed through a Power Point presentation. He also informed that the Environmental Impact Assessment Reports of the project are also available on the Website of the Tamil Nadu Pollution Control Board.

The District Environmental Engineer requested the public participating in the public hearing to give their opinion about the project after informing their name and village of the individual.

**1.Thiru.Rajendran,Nachiyarkottai,Social Activist,T.Palur Union Head**

He said Ariyalur district was known as a cement city and there are cement companies all over the district. The demand of the people is that even today those who gave the land have not been paid the balance amount. They first gave 6 lakhs and the

remaining amount of 15 lakhs was not paid even after litigation in the court. He asked the authorities to convey the request to the government. He said that they have been longing for 20 years after giving the land and their livelihood has been ruined. He requested that one educated person in the family should get employment. He added that it was good to set up a limestone mine in this area. The plant management says that they are addressing our environment by planting saplings to prevent social unrest. Therefore, we request them to do it on behalf of the villagers. He also said that they should cooperate with the company to start the mining by getting money and getting jobs and rights. He stated that there was no difficulty in getting a government job due to the construction of this mine and that the plant management and government officials should inform the government and encourage the people to start this mine and provide employment to this area.

**2.Thiru.Vinoth, Kattupringium.**

He stated that it was through this notice board that he came to know about the Pollution Control Board. He said that to date this Pollution Control Board was not functioning in Ariyalur and daily there was a lot of pollution and dust. Moreover, the Land Acquisition Bill says that any land lying unused for more than 20 years should be returned. But till today it has been idle for more than 35 years. Therefore, that land should be given back to them but there was no possibility of this happening. He added that the affected people should be given up to 25 lakhs per acre. His friend informed him that he had been a contract supervisor for 30 years. All of you are contract workers and are getting a salary of Rs.10,000 to Rs.15,000 per month, but the general manager, supervisor, and quality controller above you are all getting a salary of more than one lakh. After giving away your land, you are employed for merely Rs.10,000 or Rs.15,000. He added that blasting in the quarries results in noise, odour and high vibration and requested to control it. He concluded that the mines could be opened after providing the people with an amount of up to 25 lakhs as a relief measure.

**3.Thiru.Anbalagan,Vellipiringium.**

He introduced himself as a farmer who gave 12 acres of land. Similar to how the Indian Peninsula is surrounded by water on three sides and land on one side, the village of Vellipringium is also occupied by quarries on three sides. It is surrounded on three sides by Ultratech Cements, India Cements and Chettinad Cements. Now Tamil Nadu Cements have arrived towards the north. He said that if all these lands are taken away, all four sides will be surrounded by Mines of the cement factories and only the village will be left at the middle. He said that the Ariyalur district was once famous for its chilli market. But after taking away their land forRs 3000 per acre, they had to go to work for

Rs 150 per month. Ultratech Cements are also crushing and ruining everything. As the social activist spoke, he said that it is difficult for people to walk on the roads because of the pollution. They cannot travel in a two-wheeler wearing a white shirt. He said that due to the operation of mines in their villages, the groundwater level has decreased and despite complaining about this to the concerned authorities, they have not taken any action. In such a situation, when the government acquired the land twice, our forefathers filed a case and went to the lawyer and filed the case and judgment was also given for it. Even in such a situation, the government started quarries at Nerenchikorai.They told the officials to continue the mine by giving relief which they also agreed to do but as on date no one has been paid. He said that we have told it to our officials and requested them to give us appropriate relief before the coming parliamentary elections as per the agreement. Many public activists say that the water levels have been reduced. He said that Tamil Nadu Cements was working with the aim to help the public and in the previous regime Amma cement was given at 90 rupees and in the present plant, good cement was available at 300 rupees. He asked them to give jobs in the company and if that was possible, to provide jobs as operator, driver and other skilled jobs when the mining starts. Also, he requested that the people who gave the land should be given priority, and compensation should be given and their heirs should get job opportunities.

**4.Thiru.Dharmaraj,Astinapuram**

He requested to give employment to those who had given land or fulfil other requests that they may have. He said that it had been decided in the court that they would get the money and they would lay the mines only after the money was in their hands. He also said that it was their right to ask and get whatever they wanted for their heirs. But it should not be said that mining should not be done as it has been 30 years for this case so far and we should act keeping this in mind.

**5.Thiru.Palraj,Vellipiringium**

He said that he too has given land to the Tamil Nadu Cement Corporation and that he has been working on a contract basis for 4 years. He also requested to provide suitable compensation and employment. He said that there was no livelihood in his town and all the land had been bought by companies like Ultratech. He asked them to provide employment to improve their lives so that their future generation would be better.

**6.Thiru.Ariyamuthu,Vellipringium**

He said that the person who spoke before him said that he had been working for four years as a contract employee and the employment has remained the same till now.

He said that everyone was only asking the company for a job, but no one was asking them to give them a minimum wage. He asked employers to set a minimum living wage for human beings and to pay them a living wage either on a contract basis or through the company. People in Ariyalur District are suffering from cancer, heart and respiratory problems and requested that the minimum wage be according to their economic needs and livelihood.

**7.Thiru.Mugilan, Coordinator,Tamil Nadu Environment Protection Movement, Karur**

It is clear from the documents that they have given that this limestone quarry over an extent of 57 acres cannot be established legally. On page number 585 of their document, they stated that there are houses in the east and southeast and that if there are houses within 300 m of the place where the quarries are to be located; permission should not be given for quarrying. He cited a similar incident that occurred 4 months ago in Minister Raghupathi's hometown of Lakshmipuram village in Tirumayakottai, Pudukottai district, where the permission granted was cancelled by the Madurai High Court. He said that a similar incident would happen here and any work should be legal but this Lease 4 was not legal. He said that if explosives are not used according to the law, the Tahsildar to the District Collector have the authority to take action on it and apart from them, the Sub Inspector to Superintendent of Police and DGMS of the Central Government have the authority too.He also informed that according to the law, blasting should be done in the quarry only between 1:00 PM and 2:00 PM and that only Nonel blasting should be done and there should not be too much vibration during the blasting. He said that the quarry should follow the serial blasting method and the working hours of the quarry should be between 7 AM to 5 PM. If not, then the Tahsildar to District Collector have the authority to take action on it. After that, it is reported that the quarry is mined in bench method i.e., 6 m long, 6 m wide, 6 m deep and at 60-degree slope, but it is not practised anywhere. He said that the latitude and longitude of these quarries are the same for Lease 3 and Lease 4 as uploaded on the Tamil Nadu Pollution Control Board's website. He also said that the quarry should always be continuous or else a separate license should be obtained. However in the PowerPoint presentation of the company, there is a gap in between the land and no continuity in the lease land for quarry lease four and this is illegal. When the case of 314 people was pending in the court, the village administrative officer gave evidence that it was not so and it has gone to the Tahsildar for inspection and now it has come to the hearing. This is completely fraudulent. So they should be punished and TANCEM company is also involved in this and they cannot give legal permission to the quarry.

They say that they take the water required for the quarry from neighbouring quarries, which is wrong according to the law and the TDS of the water in this quarry has been brought to 1330 mg. As per the letter from the Chief Secretary of Tamil Nadu, fences should be erected around the mines. Also, if a vehicle carries more than ten tonnes on rural roads, it should be reported to the RDOor the police and there is a law that states that a fine of Rs.20,000 for the first excessiveton and Rs.2000 for subsequent tonnes should be imposed. He also said that due to these quarries, the danger of climate change is fast approaching us and if the quarries are operating, all the areas will become desert and the government has decided to use them as water storage tanks. The government's policy is that once we give land, we cannot return to it. So it is time to realize all this and act. He asked the authorities to respect the law and not give permission for Lease 4 as this quarry is not eligible to operate legally. Also, permission should not be given if there is a water body within 500 m. Therefore, permission cannot be given due to the location of various water sources nearby. Further, the law states that no quarry should be operated within 50 m of a public road, even if it is a carriageway. Despite all that, the plan for this quarry has been prepared and concluded that permission for this quarry should not be given.

**8.Thiru.Ashok Kumar,Tittakudi**

He said that the Government has to implement the project as per the rules and to provide necessary facilities to Pudupalayam village such as the construction of school classrooms, public toilets, water tanks, Bitumen and cement roads and employment.

**9.Thiru.Illavarasan,Chettithirukonam**

He stated that he had come here to effectively protect the environment as a fundamental duty of every Indian citizen as per Article 51 (A) (G) of the Constitution of India. It is completely wrong for this company to prepare the EIA report while the case is pending. According to the Environmental Impact Assessment report, it has expired in the year 2023 and a detailed report has been submitted to the State Environment Impact Assessment Authority. As per the 2022 environmental protection index, out of 180 countries, India ranked last. The source for this is the research by International Universities such as L-Columbia University Metpain who do not consider India's environmental reporting to be acceptable. Tamil Nadu Cements occupies a total area of 1510.91 acres in Ariyalur. Even if one person is employed per acre, 1500 people may be employed. When they did not provide the appropriate amount for the land, before submitting the EIA report for the year 2018, a report was filed with the Ariyalur RDO and they requested a detailed report and submitted a petition to the State Environment Impact Authority and made this report. This report has expired with the year 2023.

Based on the 2011 census, an Environmental impact assessment report was prepared for a 10 KMradius. However, since the census is carried out once in 10 years only and considering the increase in population density, it should have been done for a 15 KM radius.

Further, the report makes no mention of biodiversity migration. There are peacocks, wild boars, deer etc. in the areas where this mine is located. Who will be responsible for its relocation? This environmental report is not recorded and seismic zone classifications are different in the detailed report and summary report, with one stating zone 2 and the other zone 3. According to the Paris Agreement, India's position is to reduce CO emissions. Considering there are 11 red-category industries, and 73 mines here, if you are permitting new mines, how much carbon emissions will be reduced?These industries generate electricity from the power plants that use coal as fuel which will result in further carbon emissions. Blasting permission should be withheld for most operational mines in Ariyalur. This process is going on in a 78-hectare mine owned by ICL in Chettirukonam panchayat where he lives.This blasting water is discharged into the Marudaiyar River causing water pollution. Therefore, the blasting permit given to that company should be immediately inspected by the BDO and RDO as mentioned by Mugilan and cancel the blasting permit as it is causing land tremors. The EIA report is not clear about the emergency plan. The works main controller and works incident controller are not clearly mentioned in the report. As per the Environment Act 1986, this report has expired and hence needs to be re-studied. The permits given to Eco-Tech Lab Pvt Ltd should be cancelled and action should be taken against them as the reports given are incorrect. Eco-Tech Lab Pvt Ltd will be sued in the High Court or National Green Tribunal. Also, the report did not mention the date of wind and sound monitoring in Muniyankurichi and Nerinchikorai areas and whether any vehicles went there, and the latitude and longitude are not clear. The report says it was taken before and after the monsoon. When were the water samples collected from Marudaiyar River – Pre or post-monsoon? Most of the companies leave this blasting water in the Marudaiyar River. He asked to check the rainfall amount taken that year.

He stated that the EIA report has expired as per the TORwhich states that the EIA Studyshall be valid for a period of three years from the date of submission of the EIA/EMP report as per OMNGJ 11013/41. 2006 1A 2 category 1 / dated 29th August 2017. The National Accreditation Board Education and Training has clearly mentioned that it was valid until September 15, 2023. It is a totally fake report. So don't come to any conclusion based on this one report. He expressed his strong opposition to all the three kankar and limestone mines mentioned earlier. I have clearly sent the details to SEIAA on the entire deficiency in the report. He also requested that all these reports

submitted by the Tamil Nadu Cements Corporation should be void. He advised that the Air Quality Index must be monitored properly. Ultratech is the only company that produces electricity using Solar Power. Due to climate change, three months of rainfall occurswithin 3 days or 3 hours. Also, the mine has been divided into two parts - Block 1 and Block 2 for the same Lease 4. He said that the Tamil Nadu Pollution Control Board should not grant consent to establish or operate this quarry and if it does, they will have to approach the court and he registered that he strongly opposed the entire public hearing process.

**10.Thiru.Palanivel,Srinivasapuram**

He informed that according to the UN, the pollution caused by the mining industry is between 4% and 7. He expressed his support for protecting the environment without pollution in the mining industry and welcomed the establishment of this mine.

**11.Thiru.Sivaranjan,Ariyalur**

He said that he expressed his support for this hearing in the hope that the coming of this mine would provide employment to youths. He reiterated his support by asking for adequate road facilities and drinking water facilities for the villages surrounding the mine.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ariyalur District informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through video graphy / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 8 Number of petitions received during the public hearing meeting on M/s.Tamil Nadu Cements Corporation Limited for the proposed Lime kankar and Limestone Quarry over an extent of 22.89.0 Ha at Pudupalayam Village are enclosed herewith.

Further, no petitions of written representation were received in the O/o. District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ariyalur District. It is also informed that there is no E-mail received in the O/o. District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ariyalur District from the public about the views / comments / complaints on M/s.Tamil Nadu Cements Corporation Limited for the proposed Lime kankar and Limestone Quarry over an extent of 22.89.0 Ha at Pudupalayam project.

List of public who attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the Audio / Video of entire proceedings of public hearing are enclosed herewith.

List of public who attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the Audio / Video of entire proceedings of public hearing are enclosed herewith.

**Convener,**
**Public Hearing Meeting/**
**District Environment Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Ariyalur.**

**President ,**
**Public Hearing Meeting/**
**Revenue Divisional Officer/**
**Sub Divisional Magistrate,**
**Ariyalur Revenue Division,**
**Ariyalur District.**

**24.02.2024 அன்று பிற்பகல் 04.00 மணியளவில், பாரி மஹால், திருச்சி – சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலை, தேளூர் மின்சார வாரிய அலுவலகம் எதிர்புறம், தேளூர் கிராமம் & அஞ்சல், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தின் அறிக்கை.**

---

**திட்டம்: தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (தமிழ்நாடு அரசு நிறுவனம்) நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட சுண்ணாம்பு கன்கர் மற்றும் சுண்ணாம்புக்கல் குவாரி, விஸ்தீரணம் 22.89.0 ஹெறக்டேர், புல எண்கள்.350, 351/1A, 351/4A, 351/7A, 351/12A, 356, 357 மற்றும் பிற புதுப்பாளையம் கிராமம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம்.**

---

**இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள் :**

1. **திரு.மு.ராமகிருஷ்ணன்,**
   வருவாய் கோட்டாட்சியர்,
   அரியலூர்,
   அரியலூர் மாவட்டம்.

2. **முனைவர்.மு.செந்தில் குமார்,**
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   அரியலூர் மாவட்டம்.

**திட்டம் சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் :**

1. **திரு. T.ரவிச்சந்திரன்,**
   **துணை பொது மேலாளர்/ஆலை தலைவர்,**
   **தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்,**
   **அரியலூர்.**

2. **திரு. M.முத்துசெல்வன்,**
   **துணை மேலாளர்,**
   **தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்,**
   **தலைமை அலுவலகம்,**
   **சென்னை.**

3. **திரு. P.கோபிநாத்,**
   **சுற்றுச்சூழல் ஆலோசகர்.**

**கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட அரசு அலுவலர்கள், நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகைபுரிந்த வருவாய் கோட்டாச்சியர், அரியலூர், பொதுமக்கள், விவசாய சங்கபிரதிநிதிகள், சுற்றுச்:சூழல் ஆர்வலர்கள், வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கைத் துறையினர், திட்டமுனைவோர், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தினரையும் மற்றும் அனைவரையும் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக வரவேற்றார்.

மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, மேற்படி அறிவிக்கையில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சில தொழிற்சாலை திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் அவசியமாகிறது என்றார். பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைப்பது நடைமுறை என்றார். தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தினர், அரியலூர் மாவட்டம் அரியலூர் வட்டம் புதுப்பாளையம் கிராமத்தில் 22.89.0 ஹெக்டேர் பரப்பளவில் சுண்ணாம்பு கன்கர் மற்றும் சுண்ணாம்புக்கல் எடுப்பதற்கான சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற விண்ணப்பிக்கப்பட்டது என்றார். சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டுப் பெறுவதற்காக கருத்துக் கேட்புக்கூட்டம் நடைபெறுகிறது என்றார்.

மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் பொது அறிவிப்பு 30 நாட்களுக்கு முன்பாக 23.01.2024 தேதியிட்ட தினத்தந்தி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததைக் கூறினார்.

தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தினர் சுரங்கத் திட்டம் தொடர்பாகவும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தொடர்பாகவும் காணொளி காட்சி (பவர்பாய்ன்ட்) வாயிலாக விளக்குவார்கள் என்றார். அதன்பின், பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் தங்களுடைய கருத்துக்களை நேரடியாக தெரிவிக்கலாம் அல்லது மனுவாகவும் தரலாம் என்றார். அவ்வாறு தெரிவிக்கும் கருத்துக்கள் வீடியோ / ஆடியோ கிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, கூட்ட நடவடிக்கைகள் மற்றும் பதிவு செய்த ஒலி / ஒளி குறுந்தகடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டார். மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர், அரியலூர் அவர்களை இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்பிறகு, வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் அனைவரையும்: வரவேற்று, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தினரை இத்திட்டம் தொடர்பான விளக்கவுரையை நடத்தக்கோரி கேட்டுக்கொண்டார்.

ஆலோசகர் திரு.P.கோபிநாத் அனைவரையும் வரவேற்று இத்திட்டம் தொடர்பாகவும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தொடர்பாகவும் பவர்பாய்ன்ட் வாயிலாகத் தெரிவித்தார். மேலும், இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்திலும் உள்ளதாகத் தெரிவித்துக்கொண்டார்.

பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பொதுமக்கள் திட்டம் தொடர்பான தங்களது கருத்துக்களை, தங்களது பெயர் மற்றும் ஊர் பெயர் தெரிவித்து பின், கருத்துகளை பதிவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

1. **திரு. ராஜேந்திரேன், நாச்சியார்பேட்டை, சமூக ஆர்வலர், தா.பழூர் ஒன்றிய அவைத்தலைவர்.**

அரியலூர் மாவட்டமே சிமெண்ட் சிட்டி என்று அறிவிக்கின்றனர் என்றும் மாவட்டம் முழுவதும் சிமெண்ட் நிறுவனங்களாக உள்ளன என்றும் தெரிவித்தார். மேலும், மக்களுடைய கோரிக்கை என்னவென்றால், நிலம் கொடுத்தவர்களுக்கு இன்றும் நிலுவை தொகை வழங்கவில்லை என்றும் முதலில் 6 லட்சம் கொடுத்தார்கள் மீதமுள்ள 15 லட்சம் தொகையை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தும் வழங்கவில்லை என்றும், தங்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுக்க வேண்டிய நிலுவை தொகையினையும் வழங்க வேண்டும் என மக்கள் கேட்கும்பொழுது தெரிவித்தார்கள் என கூறினார். அந்த கோரிக்கையை அரசுக்கு அதிகாரிகள்

தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். ஏனென்றால் அவர்கள் நிலத்தை கொடுத்துவிட்டு பணம் வரவில்லை என்று 20 ஆண்டுகளாக ஏங்கி கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் வாழ்வாதாரம் கெட்டு போய் உள்ளது என்றும் தெரிவித்தார். ஆகையால்தான் அவர்கள் ஆதங்கமாக இருக்கிறார்கள். குடும்பத்தில் ஒரு படித்த நபருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். ஆகையால் இந்த பகுதிக்கு சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைவது நல்லதுதான் என தெரிவித்தார். சமூக சீர்கேடுகளை தடுக்க மரக் கன்றுகள் நட்டு நமது சுற்றுச்சூழலை நிவர்த்தி செய்கிறோம் என்று ஆலை நிர்வாகம் சொல்கிறார்கள். ஆகையால் அதை செய்து தருமாறு ஊர் பொதுமக்கள் கேட்டுக்கொள்கிறோம். மேலும் சுரங்கம் ஆரம்பிப்பதற்கு பணம் வாங்கிக்கொண்டு வேலை மற்றும் தங்களது உரிமைகளைக் பெற்றுக் கொண்டு ஒத்துழைப்பு தர வேண்டும் என கூறினார். இந்த சுரங்கம் அமைப்பதால் அத்தகைய அரசு வேலைக் கிடைப்பதில் சிரமம் இல்லை என்றும் அதைப் பயன்படுத்தி இந்த பகுதிக்கு நீங்களும் ஆலை நிர்வாகமும் அரசு அதிகாரிகளும் அரசுக்கு தெரிவித்து ஒரு வேலை வாய்ப்பை மக்களுக்கு ஊக்குவித்து உங்களுடைய சுரங்கத்தினை தொடங்கி வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**2. திரு.வினோத், காட்டுப்பிரிங்கியம்.**

மாசு காட்டுபாடு வாரியம் என்று இருப்பது இந்த போர்டு மூலம்தான் தெரிந்துகொண்டேன். இன்றுவரை இந்த மாசு காட்டுபாடு வாரியம் அரியலூரில் இயங்கவே இல்லை என்றும் தினசரி அதிகபடியான மாசு மற்றும் தூசு ஏற்படுகிறது என்றும் தெரிவித்தார். மேலும் நிலம் கையகப்படுத்தும் மசோதா சொல்வது என்னவென்றால், 20 ஆண்டுகளுக்கு மேலாக எந்த நிலம் உபயோகத்தில் இல்லாமல் இருக்கிறதோ அந்த நிலத்தை திருப்பி தரவேண்டும் என்று சொல்கிறது. ஆனால் இன்று வரை 35 ஆண்டுக்கு மேலாக சும்மா தான் இருக்கிறது. எனவே அந்த நிலத்தை மீண்டும் அவர்களுக்கே தரவேண்டும் என்றும் ஆனால் தருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையாக 1 ஏக்கருக்கு ரூ. 25 லட்சம் வரை தரலாம் என்றும் தெரிவித்தார். தமது நண்பர் அவர்கள் 30 வருடமாக ஒப்பந்தப்பணியாளராக இருக்கிறேன் மேற்பார்வையாளராக இருக்கிறேன் என்று சொல்கிறார்கள், ஆனால் தாங்கள் அனைவரும் ஒப்பந்தப் பணியாளராகத்தானே இருக்கிறீர்கள் மாதம் ரூ.10,000 முதல் ரூ.15,000 வரை தானே சம்பளம் வாங்கிக்கொண்டு இருக்கிறீர்கள், உங்களுக்கு மேலே உள்ள பொது மேலாளரோ, மேற்பார்வையாளரோ, தரக்கட்டுப்பாட்டாளரோ அனைவரும் ஒரு லட்சத்திற்கும் மேலாக சம்பளம் வாங்குகிறார்கள். உங்கள் நிலத்தை கொடுத்துவிட்டு தாங்கள் ரூ.10,000 அல்லது ரூ.15,000-த்திற்கு தானே வேலை செய்து கொண்டு இருக்கிறீர்கள். மேலும் குவாரிகளில் வெடி வெடிக்கிறார்கள் அதன் மூலம் தங்களுக்கு சத்தமும், வாடையும், அதிகமான அதிர்வுகளும் ஏற்படுவதாகவும் அதனை கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பொதுமக்களுக்கு ரூ. 25 லட்சம் வரை நிவாரணமாக தந்துவிட்டு தாராளமாக சுரங்கத்தை திறந்துகொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

**3. திரு.அன்பழகன், வெளிப்பிரிங்கியம்.**

தான் ஒரு விவசாயி என்றும். இந்நிலத்தில் தனக்கும் 12 ஏக்கர் உள்ளது என்றும் தெரிவித்தார். இன்றைக்கு இந்திய பெருங்கடலை சுற்றி மூன்று பக்கம் கடலாலும் ஒரு பக்கம் நிலப்பரப்பாக அமைந்துள்ளது போல வெளிப்பிரிங்கியம் கிராமமும் மூன்று பக்கமும் குவாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதாவது தென்பகுதியில் அல்ட்ராடெக் சிமெண்ட்ஸ், இந்தியா சிமெண்ட்ஸ், செட்டிநாடு சிமெண்ட்ஸ் இப்படி மூன்று பக்கமும் சூழ்ந்துள்ளது. தற்போது வடபுறமாக மேல்புறத்தை நோக்கி அரசு சிமெண்ட் ஆலை நிலத்தை கையகப்படுத்த வந்துள்ளார்கள். ஆக மொத்தம் இவர்களும் நிலங்களை எடுத்துவிட்டால் நான்கு புறமும் சிமெண்ட் ஆலையின் சுரங்களால் சூழ்ந்துவிடும் எனவும் நடுவில் ஊர் மட்டும் இருக்கும்

எனவும் தெரிவித்தார். அரியலூர் மாவட்டமானது முன்பு மிளகாய் மண்டிக்கு பேர்போன ஊர் என்றும் அந்த ஏரியாவில் உள்ள இடத்தை வெறும் மூவாயிரம் ரூபாய் ஏக்கருக்கு என்று பேசி நிலத்தை கொடுத்துவிட்டு மாதம் ரூபாய் 150-க்கு வேலைக்கு சென்றார்கள் என்றும் தெரிவித்தார். அடுத்தப்படியாக அல்ட்ராடெக் சிமெண்ட்ஸ் வந்து எல்லாவற்றையும் நசுக்கி பிழிந்துகொண்டு இருக்கிறார்கள். சமூக ஆர்வலர் பேசியவாறு, வெள்ளை சட்டை போட்டுக்கொண்டு கைகாட்டி வரை இரு சக்கர வாகனத்தில் வரமுடியாது, அவ்வளவு மாசு ஏற்பட்டு பொதுமக்கள் சாலைகளில் செல்ல முடியாமல் சிரமப்படுவதாக தெரிவித்தார். தங்கள் ஊரிலுள்ள நீர் நிலைகளை வரும் குவாரிகள் சுரங்கங்கள் அமைத்துவிட்ட காரணத்தினால் தங்கள் நீர் நிலைகளில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிட்டது என்றும் இதைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் கொடுத்தும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு இரண்டு முறை நிலத்தை கையகப்படுத்தும் போது எங்கள் மூதாதையர்கள் வழக்கு தொடுத்து வழக்கறிஞரிடம் சென்று வழக்கு தொடர்ந்தார்கள் என்றும் அதற்கு தீர்ப்பும் வழங்கினார்கள் என்றும் தெரிவித்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அரசு நெருஞ்சிக்கோரையில் குவாரிகளை தொடங்கினார்கள். வழக்கு இருக்கும் போது நிவாரணத்தை வழங்கிவிட்டு சுரங்கத்தை வைத்துக்கொள்ளுங்கள் என்று அதிகாரிகளிடம் தெரிவித்தோம், அவர்களும் ஒப்புதல் வழங்கினார்கள் ஆனால் இன்றுவரை யாருக்கும் பணம் வழங்கவில்லை. அதை நம்முடைய அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம் என்றும், ஒப்புதலின்படி வருகிற பாராளுமன்ற தேர்தலுக்குள் எங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பொது ஆர்வலர்கள் பலர் நீர் சூழல் போய்விட்டது என்று கூறுகிறார்கள் எனத் தெரிவித்தார். அரசு சிமெண்ட்ஸ் பொது நோக்கத்தோடு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்றும் கடந்த ஆட்சியில் அம்மா சிமெண்ட் 90 ரூபாய்க்கு கொடுத்தார்கள் என்றும் இன்றைக்கு இருக்கிற ஆலையிலே 300 ரூபாய்க்கு நல்ல சிமெண்ட் கிடைக்கிறது என்றும் தெரிவித்தார். நிறுவனத்தில் வேலை கொடுங்கள் என்றும் இல்லையென்றால் சுரங்கம் ஆரம்பிக்கும்போது ஆப்ரேட்டர், டிரைவர் மற்றும் அனைத்து தொழில் தெரிந்த மக்கள் தங்கள் ஊரில் இருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு வேலை கொடுக்குமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், கருத்துக் கேட்பு கூட்டத்தில் பேசியபடி நிலம் கொடுத்த மக்களுக்கு முக்கியத்துவம் அளித்து இழப்பீட்டுத் தொகையையும் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

**4. திரு. தர்மராஜ், அஸ்தினாபுரம்.**

நிலம் கொடுத்தவர்களுக்கு உங்களால் வேலை கொடுக்க முடிந்தால் கொடுங்கள் அல்லது அவர்களுக்கு என்ன வேண்டுமோ அதனை செய்து கொடுங்கள் என்றும் கேட்டுக்கொண்டார். ஊரில் தீர்மானம் செய்து தங்களுக்கு வேண்டியதை கேளுங்கள் என்றும். நீதிமன்றத்தில் பணம் கிடைத்துவிடும் என்று தீர்ப்பாகிவிட்டதாகவும், பணம் தங்கள் கையில் கிடைத்த பிறகு தான் மைன்ஸ் வைப்பார்கள் என்றும் தெரிவித்தார். மேலும் தங்கள் வாரிசுகளுக்கு என்ன வேண்டுமோ அனைத்தையும் கேட்டுப் பெறுங்கள் அது தங்கள் உரிமை எனவும் தெரிவித்தார். ஆனால் சுரங்கம் வைக்கக்கூடாது என சொல்லக்கூடாது இதுவரை இந்த வழக்கிற்காக 30 ஆண்டுகள் ஆகிவிட்டன எனவும் இதை மனதில் வைத்துக்கொண்டு செயல்படுமாறும் தெரிவித்தார்.

**5. திரு. பால்ராஜ், வெளிப்பிரிங்கியம்.**

தாங்களும் அரசு ஆலைக்கு நிலம் கொடுத்துள்ளதாகவும், தான் 4 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிவருவதாகவும் தெரிவித்தார். தகுந்த இழப்பீடு, வேலைவாய்ப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். தங்கள் ஊரில் வாழ்வாதாரம் ஏதுமில்லை எனவும்

அனைத்து நிலமும் அல்ட்ராடெக் போன்ற நிறுவனங்களால் வாங்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார். தங்கள் வாழ்வு மேலோங்க வேலைவாய்ப்பு செய்துதருமாறும் அதனால் தங்கள் தலைமுறை நன்றாக இருக்கும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**6. திரு.அரியமுத்து, வெளிப்பிரிங்கியம்.**

தனக்கு முன்பு பேசிய நபர் நான்கு வருடமாக பணியாற்றிவருகிறார் என்றும் தற்போது வரை வேலைவாய்ப்பு அப்படியே உள்ளதாகவும் தெரிவித்தார். அனைவரும் நிறுவனத்தாரிடம் வேலை வேண்டும் என்று மட்டுமே கேட்கிறீர்களே தவிர யாரும் தங்களுக்கு குறைந்த பட்சம் ஊதியம் கொடுங்கள் என்று கேட்பது கிடையாது எனத் தெரிவித்தார். மனிதன் அடிப்படையாக வாழ்வதற்கு குறைந்த பட்ச ஊதியத்தை நிறுவனத்தார் நிர்ணயிக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது நிறுவனத்தின் மூலமோ மக்கள் வாழ்வதற்கு ஏற்ப ஊதியத்தை கொடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். அரியலூர் மாவட்டத்தில் மக்கள் அதிகமாக புற்றுநோய், இருதயம், சுவாசக்கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர் எனவும் அவர்களின் பொருளாதார தேவைக்கும் வாழ்வாதாரத்திற்கும் ஏற்ப குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

**7. திரு.முகிலன், ஒருங்கிணைப்பாளர் , தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் , கரூர்.**

சுண்ணாம்புக்கல் குவாரி 57 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருப்பதாகவும் அக்குவாரி சட்டப்படி இருக்கிறதா என்றுப் பார்த்தால் அவ்வாறு அரசு சொல்லக்கூடிய விதிகளின்படி இல்லை என்பது அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய ஆவணங்களிலிருந்து தெரிகிறது. இவர்களது ஆவணத்தில் பக்கம் எண் 585-ல் கிழக்கு மற்றும் தென்கிழக்கில் வீடுகள் இருக்கிறது என்றும் குவாரிகள் அமையக்கூடிய இடத்திலிருந்து 300 மீ தூரத்திற்குள் வீடுகள் இருந்தால் குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது என்றும் தெரிவித்தார். அப்படி அனுமதி பெற்ற குவாரியானது கடந்து 4 மாதங்களுக்கு முன்பு அமைச்சர் ரகுபதி அவர்களுடைய சொந்த ஊரான புதுக்கோட்டை மாவட்டம், திருமயக்கோட்டையிலுள்ள லட்சுமிபுரம் கிராமத்தில் அனுமதி கொடுக்கப்பட்டு, மதுரை உயர்நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். அதுபோன்ற சம்பவம் இங்கேயும் நிகழும் என்றும் எந்த வேலை செய்தாலும் சட்டப்படியிருக்க வேண்டுமென்றும் ஆனால் இந்த அலகு 4 சட்டப்படி இல்லை என்றும் தெரிவித்தார். சட்டப்படி வெடி மருந்தை பயன்படுத்தாவிட்டால் அதன் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் வட்டாட்சியர் முதல் மாவட்ட ஆட்சித்தலைவர் வரைக்கும் அதிகாரமுள்ளது என்றும் அதுமட்டுமல்லாமல் துணை ஆய்வாளர், காவல் கண்காணிப்பாளர், ஒன்றிய அரசினுடைய டி.ஜி.எம்.எஸ் வரை அதிகாரம் இருக்கிறது எனவும் தெரிவித்தார். மேலும் குவாரியில் சட்டப்படி மதியம் 1 மணி முதல் 2 மணி வரைதான் வெடி வெடிக்க வேண்டும் என்றும் அதுவும் நாணல் வெடிதான் வைக்க வேண்டும் எனவும் தெரிவித்து அந்த வெடி வைக்கும் போதும் பெரிதாக அதிர்வு இருக்கக்கூடாது எனவும் தெரிவித்தார். குவாரியானது சீரியல் பிளாஸ்டிங் முறையை பின்பற்ற வேண்டும் எனவும் குவாரி இயங்கக்கூடிய நேரம் காலை 7மணி முதல் மாலை 5மணி வரை தான் இருக்க வேண்டுமெனவும் இல்லாவிட்டால் அதன் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் வட்டாட்சியர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் உண்டு எனவும் இதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டுமெனவும், இந்த சட்டம் அரசு தொழிற்சாலைக்கும் பொருந்தும் எனவும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து குவாரியை பென்ச் முறையில் அதாவது 6 மீ நீளம், 6 மீ அகலம், 6 மீ ஆழம், 60 டிகிரி ஸ்லோபில் தான் வெட்டி எடுப்பதாக தெரிவிக்கின்றனர், ஆனால் அவ்வாறு நடைமுறையில் எங்குமில்லை எனத் தெரிவித்தார். இந்த குவாரியின் அட்சரேகை தீர்க்கரேகை அலகு மூன்றிற்கும் நான்கிற்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்பதை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்திலிருந்து எடுத்துள்ளோம் என்று தெரிவித்தார். மேலும், குவாரி எப்போதும்

தொடர்ச்சியாக இருக்க வேண்டும் எனவும் இல்லையென்றால் தனித்தனியாக உரிமம் வாங்க வேண்டும் எனவும் ஆனால் இந்நிறுவனத்தின் பவர்பாயிண்ட் பிரசன்டேசனில் குவாரி அலகு நான்கில் ஒரு பகுதி சுரங்க நிலத்திற்கும் மற்றொரு பகுதி சுரங்க நிலத்திற்கும் நடுவே வேறு நபர்களின் நிலங்கள் உள்ளது, குவாரி அலகு நான்கின் நிலங்கள் தொடர்ச்சியாக இல்லை என்றும் இது சட்ட விதிமீறலோடு இருக்கிறது எனவும் தெரிவித்தார். நீதிமன்றத்தில் 314 பேரது வழக்கு நிலுவையில் இருக்கும்போது அவ்வாறு இல்லையென்று கிராம நிர்வாக அலுவலர் சான்று கொடுத்து அதை வட்டாட்சியர் வழிமொழிந்து ஆய்வுக்கு சென்று இப்போது கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வந்துள்ளது. இது முற்றிலும் மோசடியாகும். எனவே அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் எனவும் இதற்கு TANCEM நிறுவனமும் துணைபோய் இருக்கிறது எனவும் குவாரிக்கு சட்ட அனுமதி வழங்க முடியாது எனவும் தெரிவித்தார்.

குவாரிக்கு தேவைப்படும் தண்ணீரை பக்கத்து குவாரிகளிலிருந்து எடுப்போம் என்கிறார்கள் அது சட்டப்படி தவறு என்றும் இக்குவாரியில் தண்ணீரின் டி.டி.எஸ் ஆனது 1330 மி.கி.-ற்கு கொண்டு வந்து விட்டதாக குறிப்பிடுகின்றனர். தமிழக அரசின் தலைமை செயலாளர் அறிவுறை கடிதத்தின் படி சுரங்கத்தை சுற்றி வேலிகள் அமைத்திட வேண்டும், கிராமப்புறச்சாலைகளில் பத்து டன்-ல் வாகனம் சென்றால் கோட்டாட்சியர், காவல்துறை ஆகியோரிடம் புகார் அளியுங்கள் என்றும், முதல் டன்னிற்கு 20,000 அடுத்தடுத்த டன்னிற்கு 2000 அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் உள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், இந்த குவாரிகள் ஏற்படுவதால் காலநிலை மாற்றம் என்கிற அபாயம் நம்மை நெருங்கிக்கொண்டு இருப்பதாகவும் குவாரிகள் வெட்டிவிட்டால் அந்த பகுதிகள் எல்லாம் பாலைவனம் தான் எனவும் அதை தண்ணீர் தேக்கி வைக்கும் தொட்டிகளாக பயன்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். நாம் இடம் கொடுத்துவிட்டால் நாம் வரமுடியாது வாழ முடியாது என்பதே அரசின் கொள்கையாகும். எனவே இதையெல்லாம் உணர்ந்து நாம் செயல்பட வேண்டிய தருணமாக இருக்கிறது. இந்த குவாரி சட்ட அடிப்படையில் இயங்குவதற்கு தகுதியில்லை எனவும் அதிகாரிகளுக்கு சொல்லிக்கொள்வது சட்டத்தை மதியுங்கள், அலகு 4-க்கு அனுமதி கொடுக்கக்கூடாது எனவும் கேட்டுக்கொண்டார். மேலும், 500 மீ தூரத்திற்குள் நீர் நிலைநிலைகள் இருந்தால் அனுமதி கொடுக்கக்கூடாது, பல்வேறு நீர் ஆதாரங்களை அமைந்திருப்பதால் அனுமதி கொடுக்க முடியாது, அதுமட்டுமல்ல பொதுச்சாலைகளிலிருந்து செயற்கையாக போடப்பட்ட வண்டிப்பாதைகளாக இருந்தாலும் அதுவும் பொதுசாலை தான் எனவே அதிலிருந்து 50 மீ தூரத்திற்கு குவாரி இயங்கக்கூடாது என்பது சட்டம். அதையெல்லாம் மீறி இந்த குவாரியின் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதால் இந்த குவாரிக்கு அனுமதி தரமுடியாது தரக்கூடாது என தெரிவித்தார்.

**8. திரு. அசோக்குமார், திட்டக்குடி.**

அரசு விதியின்படி திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்றும் புதுப்பாளையம் கிராமத்திற்கு தேவையான வசதிகளும், பள்ளிக்கூட வகுப்பறைகள், பொது கழிப்பிடங்கள், தண்ணீர் தொட்டி, தார் மற்றும் சிமெண்ட் சாலைகள் கட்டிக்கொடுக்குமாறும் வேலைவாய்ப்பினை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

**9. திரு.இளவரசன், செட்டித்திருக்கோணம்.**

இந்திய அரசியலமைப்பு சட்டம் 51 (A) (G)-ன் படி சுற்றுச்சூழலைக் காக்க வேண்டியது ஒவ்வொரு இந்திய குடிமகனின் அடிப்படைக்கடமை அக்கடமையை திறம்பட செய்வதற்கு நான் இங்கே வந்திருக்கின்றேன் என தெரிவித்தார். வழக்கு நிலுவையில் இருக்கும் போது இந்த நிறுவனம் EIA அறிக்கை தயார் செய்தது முற்றிலும் தவறானது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை படி 2023 ஆண்டே இது காலாவதி ஆகிவிட்டது அதற்கான விரிவான

அறிக்கை STATE ENVIRONMENTAL IMPACT ASSESMENT AUTHORITY - யிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது மற்றும் 2022 சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறியீடு 180 நாடுகளில் எடுக்கப்பட்டு அதில் இந்தியா இடம் பெற்றுள்ள இடம் கடைசி இடம் இதற்கான Source L-Columbia University, Metpain போன்ற சர்வதேச பல்கலைக்கழகங்கள் நடத்திய ஆய்வின் படி இந்தியாவினுடைய சுற்றுச்சூழல் அறிக்கையை அவர்கள் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்வது இல்லை. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அரியலூரில் மொத்த பரப்பளவில் 1510.91 ஏக்கர் பரப்பளவை ஆக்கிரமித்துள்ளது. ஒரு ஏக்கருக்கு ஒருவருக்கு வேலை கொடுத்து இருந்தால் கூட 1500 பேருக்கு வேலை கொடுத்து இருக்கலாம். அவர்கள் நிலத்திற்கு உரிய தொகை வழங்காதபோது 2018 ஆண்டு இதற்கான EIA அறிக்கை சமர்பிக்கும் முன், அரியலூர் வட்டாட்சியர் அவர்களிடம் இதற்கான அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டு விரிவான அறிக்கை கேட்டு State Environment Impact Assesment Authority-கிட்ட மனு கொடுத்து இந்த ஆய்வு அறிக்கையை செய்துள்ளார்கள் இந்த அறிக்கை 2023 ஆம் ஆண்டுடன் காலாவதி ஆகிவிட்டது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மட்டுமே இது 10 கீ.மீ. சுற்றளவில் மட்டுமே சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை இடம் பெற்று இருக்கிறது. 10 ஆண்டுக்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுப்பு எடுக்காத பட்சத்தில் மக்கள் தொகை அடர்த்தி அதிகரித்து இருப்பதால் இது 15 கீ.மீ. சுற்றளவாக எடுத்து இருக்க வேண்டும். அடுத்து இந்த அறிக்கையில் பல்லுயிர் இடம்பெயர்தல் பற்றி எதுவும் குறிப்பிடபடவில்லை. இந்த சுரங்கம் அமைய உள்ள பகுதிகளில் மயில், காட்டுப்பன்றி, மான் போன்றவை இருக்கிறது. இதனுடைய இடம் பெயர்தலுக்கு யார் பொறுப்பேற்பது? இந்த சுற்றுச்சூழல் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை மற்றும் நில அதிர்வு மண்டலம் வகைப்பாடு 2 மற்றும் 3 என மாறுப்பட்டு விரிவான அறிக்கையில் ஒரு மாதிரியாகவும் சுருக்கமான அறிக்கையில் வேறு ஒரு மாதிரியாகவும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. பாரிஸ் ஒப்பந்தப்படி CO அளவு குறைக்கப்பட வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு அதன்படி பார்த்தால் இங்கே ரெட் கேட்டகரி தொழிற்சாலைகள் 11 இருக்கிறது, 73 சுரங்கங்கள் இருக்கின்றது, நீங்கள் புதிய புதிய சுரங்கங்களுக்கு அனுமதி வழங்கிக்கொண்டு இருந்தால் கார்பன் அளவு எவ்வளவு குறைக்கப்படும், இந்த கம்பெனிக்கு பயன்படுத்தக்கூடிய பவர் பிளான்ட்டில் இருந்து அதிகப்படியான கார்பன் உமிழ்கள் ஏற்படுத்துகிறது. ஏனென்றால் இவர்கள் நிலக்கரியை பயன்படுத்தி மின்சாரம் எடுக்கிறார்கள். அரியலூரில் இயங்கக்கூடிய பெரும்பாலான சுரங்கங்களுக்கு பிளாஸ்டிங் அனுமதியை தடுத்து நிறுத்த வேண்டும். தான் வசிக்கும் செட்டித்திருக்கோணம் ஊராட்சியில் ICL நிறுவனத்திற்கு சொந்தமான 78 ஹெக்டர் பரப்பளவில் உள்ள சுரங்கத்தில் இந்த பிளாஸ்டிங் நடந்துகொண்ட உள்ளது. இந்த பிளாஸ்டிங் செய்த தண்ணீரை மருதையாற்றில் வெளியேற்றி கலந்து நீர் மாசு ஏற்படுத்துகிறார்கள். எனவே அந்த நிறுவனத்திற்கு வழங்கிய பிளாஸ்டிங் அனுமதியை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் முகிலன் குறிப்பிட்டதுபோல அரியலூர் வட்டார மற்றும் கோட்டாட்சியர் அவர்கள் உடனடியாக ஆய்வு செய்து அந்த நில அதிர்வு ஏற்படக்கூடிய பிளாஸ்டிங் அனுமதியை ரத்துசெய்ய வேண்டும். அடுத்து அவசர கால திட்டம் பற்றி EIA அறிக்கையில் தெளிவாக இல்லை. Work main controller, work incident controller பற்றிய அறிக்கையில் தெளிவாக குறிப்பிடபடவில்லை. என்விரான்மென்ட் ஆக்ட், 1986-ன் படி இந்த ஆய்வு காலாவதி ஆகிவிட்டதால் இந்த ஆய்வு அறிக்கையை மறு ஆய்வு செய்ய வேண்டும். இந்த Eco-Tech Lab Pvt Ltd - என்ற ஆலோசனை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை ரத்து செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கொடுக்கப்பட்ட அறிக்கைகள் பெறும்பாலும் தவறாக உள்ளது. மேலும் இந்த Eco-Tech Lab Pvt Ltd மீது உயர் நீதிமன்றத்திலே அல்லது தேசிய பசுமை தீர்ப்பாயத்திலோ வழக்கு தொடுக்கப்படும் என்பதை இந்த ஆலோசருக்கு தெரிவிக்கப்படுவதாக தெரிவித்தார். மேலும் இவர்கள் ஆய்வு செய்த பகுதிகளான முனியங்குறிச்சி, நெரிஞ்சிக்கோரை

பகுதியில் காற்று மற்றும் ஒலி கண்காணிப்பு செய்யப்பட்ட நாள் மற்றும் வாகனங்கள் ஏதும் சென்றதா எனவும் ஒலி அளவு எவ்வளவு என அறிக்கையில் குறிப்பிடபடவில்லை அதைப்போன்று எந்த அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை எனவும் தெளிவாக குறிப்பிடப்படவில்லை எனவும் தெரிவித்தார். இவர்கள் இங்கே குறிப்பிடக்கூடிய வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய பகுதியில் மான்சூனுக்கு முன்பும், பின்பும் இரண்டு முறையில் ஆய்வு மேற்கொண்டதாக கூறப்பட்டுள்ளதாகவும் இவை அனைத்தும் விவசாயத்திற்கு உகந்த பூமி எனவும் தெரிவித்தார். நீர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மறுதையாறு இது எனவும் இந்த ஆற்றில் தண்ணீர் வரும்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா? எந்த காலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்படவில்லை எனவும், இந்த மருதையாற்றில் பிளாஸ்டிங் செய்யப்பட்ட தண்ணீரை பெரும்பாலான நிறுவனங்கள் விட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார். மேலும், மழை அளவு எந்த ஆண்டு எடுக்கப்பட்டது என சரிபார்க்கவும் எனவும் கேட்டுக்கொண்டார். மூன்று ஆண்டுதான் இந்த EIA report-ன் Period காலம் என்பது TOR-ல் prescribed செய்துள்ளபடி இந்த EIA study report shall be valid for the period three years from the issued the submission of EIA and EMP report as per OMNGJ 11013/41.2006 1A 2 Category-1 / dated 29th August 2017 - டன் இது முடியும். National Aggregation Board Education Training centre தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது valid for செம்படம்பர் 15, 2023 உடன் இது முடிந்துவிட்டது. It is totally a fake report ஆகவே இந்த ஒரு அறிக்கையை வைத்து எந்த ஒரு முடிவிற்கும் வரக்கூடாது. இதற்கு முன்பு சொன்ன மூன்று கன்கர் மற்றும் சுண்ணாம்புகல் சுரங்கங்கள் அனைத்திற்கும் எனது கடுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றேன். அறிக்கையிலுள்ள முழு குறைப்பாட்டையும் SIEAA சென்னைக்கு தெளிவாக அனுப்பி இருக்கிறேன். இந்த தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சமர்ப்பித்துள்ள இந்த அறிக்கைகள் முழுவதையும் இரத்து செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இங்கு வேறு நிறுவனத்திற்காக உளவு பார்க்கும் உங்களுக்கும் ஒன்றை சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் சரியாக Air Quality Index-ஐ moniter செய்ய வேண்டும். இதில் Ultratech நிறுவனம் மட்டும் Solar System பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். பருவநிலை மாற்றத்தால் மூன்று மாதம் பெய்ய வேண்டிய மழை 3 நாட்கள் அல்லது 3 மணி நேரத்தில் பொழிந்து விடுகிறது. சுரங்கம் நான்கில் ஒரே சுரங்கத்திற்கு இரண்டு பகுதிகளாக பிளாக் 1, பிளாக் 2 என பிரித்து குத்தகை பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் இந்த குவாரி அமைப்பதற்கும் மற்றும் துவங்குவதற்கும் அனுமதி அளிக்கக் கூடாது எனவும் அவ்வாறு வழங்கும் பட்சத்தில் நீதிமன்றத்தை நாட நேரிடும் எனவும் தெரிவித்து மொத்த இந்த கருத்து கேட்பு கூட்டத்தை கடுமையாக எதிர்ப்பதாக தெரிவித்தார்.

**10. திரு . பழனிவேல், சீனிவாசபுரம்.**

சுரங்கத்தொழில் மூலமாக மாசு ஏற்படுகிறது அந்த மாசு 4% முதல் 7% வரை இருக்கிறது என ஐ.நா. வே அறிவித்துள்ளதாகவும். எனவே சுரங்க தொழிலில் மாசு இல்லாமல் சுற்றுச்சூழலை பாதுகாத்து இந்த சுரங்கம் அமைவதை வரவேற்று தனது ஆதரவை தெரிவித்தார்.

**11. திரு.சிவரஞ்சன், அரியலூர்.**

இந்த சுரங்கம் வருவதினால் என்னை போன்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்ற நம்பிக்கையில் நான் இந்த கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தன்னுடைய ஆதரவை தெரிவிப்பதாக கூறினார். மேலம், இந்த சுரங்கத்தை சுற்றியுள்ள கிராமங்களுக்கு போதிய சாலை வசதி மற்றும் குடிநீர் வசதி வழங்குமாறு கேட்டுக்கொண்டு தனது ஆதரவை மீண்டும் தெரிவித்தார்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அரியலூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து

பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவு பெற்றதாக தெரிவித்தார்.

மேலும், தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட சுண்ணாம்பு கன்கர் மற்றும் சுண்ணாம்புக்கல் சுரங்கம், விஸ்தீரணம் 22.89.0 ஹெக்டேர் புதுப்பாளையம் கிராமத்தில் அமைப்பது தொடர்பாக பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 8 மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட சுண்ணாம்பு கன்கர் மற்றும் சுண்ணாம்புக்கல் சுரங்கம் விஸ்தீரணம் 22.89.0 ஹெக்டேர் புதுப்பாளையம் கிராமத்தில் அமைப்பது தொடர்பாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அரியலூர் அலுவலகத்தில் எந்த வித மனுக்களும் பெறப்படவில்லை. மின்னஞ்சல் மூலமாகவும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அரியலூர் அலுவலகத்தில் எந்த வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி மற்றும் ஒலி தொகுப்புகள் அடங்கிய பதிவுகோல் மற்றும் குறுந்தகடு ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**அமைப்பாளர்**
**பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் /**
**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**அரியலூர்**

**தலைவர்**
**பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் /**
**வருவாய் கோட்டாட்சியர் /**
**உட் கோட்ட நடுவர்,**
**அரியலூர் வருவாய் கோட்டம்,**
**அரியலூர் மாவட்டம்**